www.ecourtsindia.com

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 292/2023 PW 1

Name : சுந்தர் ( புகார்தாரர்)

Father's/Husband's Name : ராசுபிள்ளை

Village : கோவில்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 48/2024

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7th day of November 2024

( புகார்தாரர் ஆஜர், எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை)**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து உணவகம் நடத்தி வருகிறேன். நான் எதிரி மீது காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துளளேன். எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை புகார்தாரர் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொண்டு சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை

1. 12.07.2023 ம் தேதியிட்ட நத்தம் பாரத ஸ்டேட் வங்கி கிளையின் ரூ.10 இலட்சத்திற்கான 255193 என்ற எண்ணுள்ள காசோலை அசல் – ம.சா.ஆ.1 ஆகவும்
2. 13.07.2023 ம் தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கியின் ரிட்டன் மெமோ அசல் – ம.சா.ஆ.2 ஆகவும்
3. 26.07.2023 ம் தேதியிட்ட எனது தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் – ம.சா.ஆ.3 ஆகவும்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG100022402023/truecopy/order-1.pdf

4. 28.07.2023ம் தேதியிட்ட எனது தரப்பு அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் – ம.சா.ஆ.4 ஆகவும்

5. 11.08.2023ம் தேதியிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் – ம.சா.ஆ.5 ஆகவும்

6. 15.12.2023ம் தேதியிட்டு என் மீது எதிரி 156(3) கு.விமு.ச.வின் கீழ் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.6 ஆகவும்

7. 29.01.2024ம் தேதியில் 156(3) கு.விமு.ச.வின் கீழான மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

( மேற்கண்ட ஆவணங்கள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

( எதிரி தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2024.11.07 13:33:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG100022402023/truecopy/order-1.pdf